# ஒலிவமலையின் மீது

## (26:30-46)

*பஸ்கா உணவிற்குப் பின்பு இயேசுவும் பதினோரு அப்போஸ்தலர்களும், ஒலிவமலையின் மீதிருந்த கெத்செமெனே தோட்டத்திற்குச் சென்றனர், அங்கு அவர் ஜெபித்தார் (26:30-46).*

### *அப்போஸ்தலர்களின் மறுதலிப்பு பற்றிய அறிவித்தல் (26:30-35)*

***30அவர்கள் ஸ்தோத்திரப்பாட்டைப் பாடினபின்பு, ஒலிவமலைக்குப் புறப்பட்டுப்போனார்கள்.***

***31அப்பொழுது, இயேசு அவர்களை நோக்கி: மேய்ப்பனை வெட்டுவேன், மந்தையின் ஆடுகள் சிதறடிக்கப்படும் என்று எழுதியிருக்கிறபடி, இந்த இராத்திரியிலே நீங்கள் எல்லாரும் என்னிமித்தம் இடறலடைவீர்கள்.***

***32ஆகிலும் நான் உயிர்த்தெழுந்த பின்பு, உங்களுக்கு முன்னே கலிலேயாவுக்குப் போவேன் என்றார்.***

***33பேதுரு அவருக்குப் பிரதியுத்தரமாக: உமது நிமித்தம் எல்லாரும் இடறலடைந்தாலும், நான் ஒருக்காலும் இடறலடையேன் என்றார்.***

***34இயேசு அவனை நோக்கி: இந்த இராத்திரியிலே சேவல் கூவுகிறதற்கு முன்னே, நீ என்னை மூன்றுதரம் மறுதலிப்பாய் என்று, மெய்யாகவே உனக்குச் சொல்லுகிறேன் என்றார்.***

***35அதற்குப் பேதுரு: நான் உம்மோடே மரிக்கவேண்டியதாயிருந்தாலும் உம்மை மறுதலிக்கமாட்டேன் என்றான்; சீஷர்கள் எல்லாரும் அப்படியே சொன்னார்கள்.***

***வசனம் 30.*** *மேல்வீட்டில் அவர்களின் மாலை வேளை முடிவதற்கு அண்மையான ஒரு வேளையில், யோவான் 14-16ம் அதிகாரங்களில் பதிவு செய்யப்பட்டுள்ள செய்திகளை இயேசு அளித்து, யோவான் 17ம் அதிகாரத்தில் பதிவு செய்யப்பட்டுள்ள, தமது சீஷர்களுக்காக மிகவும் தனிப்பட்ட ஜெபத்தை ஜெபித்தார் (காண்க யோவான் 18:1). பஸ்கா முடிவில் இயேசுவும் அவரது அப்போஸ்தலர்களும்* ***ஸ்தோத்திரப்பாட்டை இணைந்து பாடினர்.*** *பஸ்காவில் ஹல்லல் சங்கீதங்கள் பாடப்பட்டன (21:9, 42; 26:20 ஆகியவற்றின் மீதான விளக்கங்களைக் காணவும்). அந்தப் பாரம்பரியத்தை இயேசுவும் அவரது சீஷர்களும் பின்பற்றினர் என்று நாம் யூகிக்க முடியும்.*

*அதன்பின்பு அந்தக் குழுவினர் எருசலேம் வாசல்களில் ஒன்றின் வழியே வெளியேறி, கெதரோன் பள்ளத்தாக்கைக் கடந்து,* ***ஒலிவமலைக்கு ஏறிச்சென்றனர்*** *(24:3ன் மீதான விளக்கங்களைக் காணவும்). இயேசு,*

*ஜெபிப்பதற்காகவும் தம்மைக் காட்டிக்கொடுப்பவருக்காகவும் காத்திருக்க இவ்விடத்திற்குச் சென்றார். இயேசுவும் பதினோரு பேரும் ஒலிவமலைக்கு நடந்து செல்லுகையில், உரையாடல் தொடர்ந்து நடைபெற்றது.*

***வசனம் 31. இயேசு*** *பதினோரு பேரிடம்,* ***இந்த இராத்திரியிலே நீங்கள் எல்லாரும் என்னிமித்தம் இடறலடைவீர்கள்*** *என்று கூறித் தகவல் தெரிவித்தார். "இடறலடைதல்" என்பதற்கான (skandalizō) கிரேக்க வார்த்தை, "இடறுதல்," "இடறுதலுக்குக் காரணமாகுதல்" அல்லது "வலை அல்லது பொறியை அமைத்தல்" என்ற நேரடி அர்த்தம் கொண்டுள்ளது. இவ்வார்த்தை புதிய ஏற்பாட்டில் பெரும்பாலும் ஒப்புவமையாகப் பயன்படுத்தப்பட்டுள்ளது.[1] அப்போஸ்தலர்கள் விரைவிலேயே தாங்கள் இடறுதலுக்கும் அவர் மீதான தங்கள் அர்ப்பணிப்பில் இருந்து புறம்பே விழுதலுக்கும் காரணமாகும் சூழ்நிலை ஒன்றை எதிர்கொள்ள இருந்தனர். "என்னிமித்தம்" என்ற சொற்றொடர், "அவர்களின் தோல்வியானது தங்கள் தனிப்பட்ட பாதுகாப்பிற்கான பயத்தினால் மாத்திரமல்ல, ஆனால் இயேசுவின் பாடுகளினுடைய நோக்கத்தைப் புரிந்துகொள்ள இயலாததாலும் ஏற்படும்" என்று R. T. France அவர்கள் நினைத்தார்.[2]*

*பின்பு இயேசு, சகரியா 13:7ல் இருந்து மேற்கோள் காண்பித்தார்:* ***மேய்ப்பனை வெட்டுவேன், மந்தையின் ஆடுகள் சிதறடிக்கப்படும்.*** *"ஆடுகள்" என்பது விரிவான கருத்தில் தோற்றகாலத்தில் இஸ்ரவேல் மக்களைக் குறித்தது. "மேய்ப்பரான" இயேசு (யோவான் 10:14; எபிரெயர் 13:20; 1 பேதுரு 2:25), தாம் கைது செய்யப்படும்போது, சீஷர்கள் ஓடிப்போவார்கள் என்பதை முன்னுரைக்க இங்கு இந்த உருவகத்தைப் பயன்படுத்தினார். "நான்" ("வெட்டுவேன்") என்பது, மக்களின் பாவங்களுக்காக இயேசு பாடுபட்டு மரிப்பார் என்று முன்தீர்மானித்த தேவனைக் குறிக்கிறது (ஏசாயா 53:4, 6, 10 வசனங்களைக் காணவும்).*

***வசனம் 32.*** *இயேசு, வருத்தம் மற்றும் கவலை ஆகியவற்றைப் பற்றி. தமது செய்தியைத் தொடர்ந்து, நம்பிக்கை மற்றும் சந்தோஷம் ஆகியவற்றின் வார்த்தைகளை உரைத்தார். மீண்டும் ஒருமுறை அவர், தாம்* ***உயிர்ப்பிக்கப்படுவதை*** *வாக்களித்தார் (16:21; 17:9, 23; 20:19), மற்றும் அவர்களுக்கு* ***முன்னே*** *அவர்* ***கலிலேயாவுக்குச் செல்வார்.*** *அவரது உயிர்த்தெழுதலுக்குப்பின்பு, ஞாயிற்றுக்கிழமை காலையில் அவரது கல்லறைக்கு வந்த பெண்கள் மூலமாக, ஒரு தூதர் அப்போஸ்தலர்களுக்கு இந்த அறிவுறுத்துதல் பற்றிய நினைவூட்டுதலைக் கொடுத்தார் (28:7, 10, 16; மாற்கு 16:7; காண்க யோவான் 21:1-23).*

*"முன்னே செல்லுதல்" என்பது "முதலில் அங்கிருத்தல்" என்று அர்த்தப்படுவதாக இருக்கையில் (காண்க 14:22), இது 31ம் வசனத்தின் மேய்ப்பன்/ஆடுகள் பற்றிய உருவகத்தை நிரப்புவதாகவும் இருக்கக்கூடும். ஒரு மேய்ப்பர் தமது மந்தையின் தலைவர் என்ற வகையில் தமது மந்தைக்கு முன்னே செல்கிறார். யோவான் 10:4ம் வசனம், "அவன் தன்னுடைய ஆடுகளை வெளியே விட்டபின்பு, அவைகளுக்கு முன்பாக நடந்துபோகிறான், ஆடுகள் அவன் சத்தத்தை அறிந்திருக்கிறபடியினால் அவனுக்குப் பின்செல்லுகிறது" என்று கூறுகிறது.*

***வசனம் 33.*** *பேதுரு,* ***உமது நிமித்தம் எல்லாரும் இடறலடைந்தாலும்,***

**நான் ஒருக்காலும் இடறலடையேன்** என்று பதில் அளித்தார். அவரது கூற்று வலிவார்ந்ததாக உள்ளது: "நான் *ஒருக்காலும்* இடறலடையேன்!" அவருடைய பண்பாகக் காணப்பட்ட வகையில் பேதுரு, மற்ற அப்போஸ்தலர்கள் நினைத்துக் கொண்டு மாத்திரம் இருந்ததை வெளிப்படையாகப் பேசினார் (காண்க 14:28; 15:15; 16:16, 22; 17:4; 18:21; 19:27).[3] இது, இயேசு கூறியிருந்ததற்குநேரெதிராக அவர் பேசிய, அவரது தெய்வீக முன்னறிவை முகத்தின் முன்பாக வெட்டிப்பேசும் முதல் வேளையாக இருக்கவில்லை. முன்னதாகவே அவர், இயேசுவின் மரணம் பற்றிய அவரது தீர்க்கதரிசனத்தை, "ஆண்டவரே, இது உமக்கு நேரிடக்கூடாதே, இது உமக்குச் சம்பவிப்பதில்லை" என்று கூறி அறைகூவல் விடுத்திருந்தார் (16:22).

**வசனம் 34.** எல்லா அப்போஸ்தலர்களும் இடறலடைவார்கள் என்று **இயேசு** முன்னுரைத்திருந்தார் (26:31), ஆனால் அந்தக்கணத்தில் அவர் பேதுருவின் மீது கவனம் குவித்தார்: **இந்த இராத்திரியிலே சேவல் கூவுகிறதற்கு முன்னே, நீ என்னை மூன்றுதரம் மறுதலிப்பாய் என்று, மெய்யாகவே உனக்குச் சொல்லுகிறேன்.** பேதுரு தமது எதிர்பேசுதலில் உண்மையுள்ளவராக இருந்தார் என்பதைக் கர்த்தர் அறிந்திருந்தார்; இல்லையென்றால் அவருக்கு உரைத்த தமது பதிலுரையில் அவர் இன்னும் கடுமையாக இருந்திருப்பார்.

பேதுரு இயேசுவை - ஒருமுறையல்ல ஆனால் மூன்று முறைகள் - மறுதலிப்பார். பேதுருவின் மறுதலிப்புகள் சேவல் இருமுறை கூவும்முன் வரும் என்று இயேசு குறிப்பிட்டார் (மாற்கு 14:30). ரபீத்துவப் பாரம்பரியம், யூதர்கள் எருசலேமில் கோழிகளை வளர்க்கவில்லை என்று கூறுகிறது.[4] இந்தப் பாரம்பரியம் முதல் நூற்றாண்டில் கடைபிடிக்கப் பட்டிருந்தாலும் இல்லை என்றாலும், யூதத்துவ ஒழுங்கு முறைகள், ரோமானியர்களை அங்கு கோழிகள் வளர்ப்பதில் இருந்து தடைசெய்யவில்லை. சேவல்கள் கூவுவதை வழக்கமாகக் கொண்டிருந்த படியால் ரோமானியர்களின் இரவு மூன்றாம் சாமம் என்பது (12:00 முதல் 3:00 மணிவரை)[5] "சேவல் கூவும் நேரம்" என்று அறியப்பட்டிருந்தது (மாற்கு 13:35).

இயேசு பேதுருவின் மறுதலிப்புகளை முன்னுரைத்தது மாத்திரமின்றி, அவர் உண்மைத்தன்மைக்குத் திரும்புதலைப் பற்றியும் முன்னுரைத்தார். பேதுரு விழுந்துபோய்விடாதபடி அவரது விசுவாசத்திற்காகக் கர்த்தர் ஜெபித்தார் என்று லூக்கா 22:31, 32 வசனங்கள் சுட்டிக்காண்பிக்கின்றன. அதன்பின்பு அவருக்கு இயேசு, "நீ குணப்பட்டபின்பு உன் சகோதரரை ஸ்திரப்படுத்து" என்று புத்திகூறினார்.

**வசனம் 35.** சாத்தியமான அளவிற்கு மிகமோசமான விளைவுகளை முன்தரிசித்த நிலையில் **பேதுரு: நான் உம்மோடே மரிக்கவேண்டியதாயிருந்தாலும் உம்மை மறுதலிக்கமாட்டேன் என்று கூறினார். அவர்,** "ஆண்டவரே, உம்மோடுகூட நான் சிறைக்குச் செல்லவும் மரிக்கவும் தயாராக இருக்கிறேன்!" என்று கூறினார் (லூக்கா 22:33). இயேசுவினிடத்தில் பேதுரு கொண்டிருந்த உறுதிப்பாடு, இயேசுவின் விரோதிகள் மீது அவர் தமது பட்டயத்தை வீசியதில் தெளிவாகிறது (யோவான் 18:10); அவருக்காகப் போரிடப் பேதுரு தயாராக இருந்தார். இருப்பினும் பிற்பாடு பேதுரு மற்றவர்களுடன் ஓடிப்போனார் (மாற்கு 14:50) மற்றும் கடைசியில் அவரை மறுதலித்தார் (மத்தேயு 26:69-75).

***சீஷர்கள் எல்லாரும்*** *இயேசுவுக்காகத் தாங்கள் கொண்டிருந்த, இறவாத உறுதிப்பாட்டை வெளிப்படுத்தினர், ஆனால் பேதுரு மிகவும் அதிகமான விடாமுயற்சி கொண்டிருந்ததாகக் காணப்படுகிறார் (மாற்கு 14:31).*

## கடும் துன்பத்தின் வேளை *(26:36-38)*

***36**அப்பொழுது, இயேசு அவர்களோடே கெத்செமனே என்னப்பட்ட இடத்திற்கு வந்து, சீஷர்களை நோக்கி: நான் அங்கே போய் ஜெபம்பண்ணுமளவும் நீங்கள் இங்கே உட்கார்ந்திருங்கள் என்று சொல்லி;*
***37**பேதுருவையும் செபெதேயுவின் குமாரர் இருவரையும் கூட்டிக்கொண்டுபோய், துக்கமடையவும் வியாகுலப்படவும் தொடங்கினார்.*
***38**அப்பொழுது, அவர்: என் ஆத்துமா மரணத்துக்கேதுவான துக்கங்கொண்டிருக்கிறது; நீங்கள் இங்கே தங்கி, என்னோடேகூட விழித்திருங்கள் என்று சொல்லி.*

***வசனம் 36.*** *ஒலிவ மலையில் ஏறினபின்பு* ***இயேசுவும்*** *பதினோரு பேரும்* ***கெத்செமனே என்னப்பட்ட இடத்திற்கு*** *வந்து சேர்ந்தனர். "கெத்செமனே" என்ற பெயர் புதிய ஏற்பாட்டில் இரு இடங்களில் மாத்திரமே காணப்படுகிறது (26:36; மாற்கு 14:32). இது இரண்டு எபிரெய/அரமாயிக் சொற்றொடர்களை ஒன்றிணைக்கும்போது "எண்ணெய் பிழிதல்" என்று அர்த்தப்படும் வார்த்தையின் ஒலியாக்கமாக உள்ளது. கெத்செமனே என்ற இடம், ஒலிவ எண்ணெய் உற்பத்திக்குத் தனது சொந்த ஆலையைக் கொண்ட இடமாக இருந்திருக்க அதிக வாய்ப்புள்ளது. யோவான் 18:1, 26 வசனங்கள் இந்த இடத்தைத் தோட்டம் (kēpos), என்று அடையாளப்படுத்துகின்றன, இந்தச் சொற்றொடர், மிக உயர்வாக விவசாயம் செய்யப்படும் எந்த இடத்தையும் குறிக்கக் கூடும். இந்த சந்தர்ப்பப்பொருளில் kēpos, என்பது "ஒலிவ மரங்களின் தோப்பு" என்பதைக் குறிப்பிட அதிகம் வாய்ப்புள்ளது. கெத்செமனேயின் உரிமையாளர் பண்டிகை காலங்களில் இயேசுவையும் அவரது தோழர்களையும் அங்கு தங்குவதற்கு அனுமதித்திருந்த ஒரு சீஷராக இருந்திருக்கலாம். இது கர்த்தரும் அவரது சீஷர்களும் அடிக்கடி வந்த இடம் என்று பல வேதவசனங்கள் சுட்டிக்காண்பிக்கின்றன. இந்த உண்மையானது அவரை எங்கு கண்டறிவது என்று யூதாஸ் அறிந்திருந்தது எப்படி என்பதை நமக்குத் கூறுகிறது (யோவான் 18:2; காண்க லூக்கா 22:39).*

*கெத்செமனே இருந்த இடம் என்று பலர் நம்பும் இடத்தில், "சகல நாடுகளின் கோவில்" என்று அழைக்கப்படும் சபைக்கட்டிடம் ஒன்று [இப்போது] உள்ளது. அதன் அருகில் கல்வேலியால் அடைக்கப்பட்ட சிறு தோட்டப்பகுதி ஒன்றுள்ளது. பழங்கால ஒலிவ மரங்கள் சில இந்தப் பகுதியில் இன்னமும் உள்ளன. இந்த மரங்கள் கிறிஸ்துவின் காலத்தியவை என்று சிலர் உரிமை கோருகின்றனர். இருப்பினும் அந்தக் காலகட்டத்தின் மரங்கள் யாவும், நகரத்தை முற்றுகையிடவும் அழிக்கவும் வந்த ரோமர்களால் வெட்டிச்சாய்க்கப் பட்டன (கி.பி. 70).[6] இம்மரங்களின் வேர்கள் எஞ்சிநின்று (அதன் பரப்பு பெரிதாக இருப்பினும்) இப்போதுள்ளபடி அவைகள் மீண்டும் வளர்ந்து மரங்களாகி இருக்கச் சாத்தியம் உள்ளது.*

குகையின் அடையாளங்கள் கொண்ட அருகில் உள்ள பகுதியொன்று கெத்செமனே தோட்டமாக இருந்திருக்கும் இன்னொரு சாத்தியக்கூறும் உள்ளது. Michael J. Wilkins அவர்கள் இந்த இடத்தை முதல் இடத்தைக் காட்டிலும் அதிகம் சாத்தியம் உள்ள இடமாகக் காண்கிறார்:

> இரண்டாவது இடமானது ஒருவேளை அதிகம் சாத்தியமானதாக இருக்கலாம், இது பாரம்பரியத் தோட்டத்தின் வடக்குப் பகுதியில் ஒருசில நூறு அடிகள் தூரத்தில் அமைந்துள்ளது, இது ஒலிவ மலையின் மீது சற்றே தாழ்ந்த பகுதியாகும். இந்தக் குகை மிகவும் பெரிதாக, சுமார் 36 x 60 அடிகள் (11க்கு 18 மீட்டர்கள்) அளவுடையதாக உள்ளது, இந்தக் குகையின் உட்பகுதிகள் எண்ணெய் ஆலையைக் கொண்ட இடமாகச் சுவர்களாக வெட்டப்பட்டுள்ளன.[7]

எண்ணெய் பிழியும் இடங்கள், ஒலிவக் கனிகள் அறுவடையைத் தொடர்ந்து, பனிக்காலம் மற்றும் குளிர் காலத்தில் மாத்திரமே பயன்படுத்தப்பட்டதால், பஸ்கா நடைபெற்ற வசந்தகாலத்தின்போது, இங்கு எவரும் இல்லாது இருந்திருக்கும். இது இரவைச் செலவிடவும், உறங்கவும் வெதுவெதுப்பான உலர்ந்த சூழ்நிலையை இயேசுவுக்கும் அவரது சீஷர்களுக்கும் தர ஈர்ப்புள்ள இடமாக இருந்தது. இயேசு ஜெபிக்கையில், ஒருவேளை சீஷர்கள் அங்கு இந்தக் குளிரான இரவில் உறங்கியிருக்கலாம் (யோவான் 18:18).[8] இயேசுவைத் கைது செய்ய (போர்வீரர்கள்) வந்தபோது, ஒரு இளம் சீஷர் "துப்பட்டி" ஒன்றை (*sindōn*) அல்லது "மேலாடையை" மாத்திரம் அணிந்திருந்தது ஏன் என்பதை இது விளக்கப்படுத்தும் (மாற்கு 14:51). மாற்குதாம் இந்த இளைஞர் என்று சிலர் நம்புகின்றனர், ஏனெனில் சுவிசேஷ எழுத்தாளர்களில் இவர் ஒருவர் மாத்திரமே இந்த நிகழ்வைப் பற்றிக் குறிப்பிடுகிறார். இந்த இளைஞர், இயேசுவுடனும் பதினோரு அப்போஸ்தலர்களுடனும் இருந்த மாற்குவாகவோ அல்லது வேறொருவராக இருந்தால், மற்றவர்களும் அவர்களுடன் இருந்தனர் என்றாகிறது.

கெத்செமனே தோட்டத்தில் சற்றுத்தூரம் சென்ற பின்பு [இயேசு], **சீஷர்களை நோக்கி: நான் அங்கே போய் ஜெபம்பண்ணுமளவும் நீங்கள் இங்கே உட்கார்ந்திருங்கள்** என்று கூறினார். அவர்களிடம் அவர், "நீங்கள் சோதனைக்குட்படாதபடிக்கு ஜெபம்பண்ணுங்கள்" என்று அறிவுறுத்தினார் (லூக்கா 22:40).

**வசனம் 37.** பின்பு, **அவர் பேதுருவையும் செபெதேயுவின் குமாரர் இருவரையும்** (அதாவது யாக்கோபுவையும் யோவானையும்) கூட்டிக்கொண்டு, சற்று அப்புறம் - "கல்லெறிதூரம்" (லூக்கா 22:41) - சென்றார். இந்த மூன்று சீஷர்களும் இயேசுவின் உள்வட்ட நண்பர்களாக இருந்தனர் (17:1ன் மீதான விளக்கங்களைக் காணவும்). இயேசுவுக்கு ஆதரவும் ஆறுதலும் தருதல் என்பதே அவருடன் அவர்கள் இருந்ததன் நோக்கமாக இருந்தது.

இந்த இடத்தில் இயேசு, **துக்கமடையவும் வியாகுலப்படவும் தொடங்கினார்.** இந்த மொழிநடை, சிலுவையின் வாதனையைக் கிறிஸ்து எதிர்கொண்டபோது அவரது மனிதத்துவத்தைப் பிடித்துக் காண்பிக்கிறது. இருப்பினும் அவர், சிலுவையில் அறையப்பட்டபோது உடல்ரீதியான மற்றும் உணர்வு ரீதியான பாடுகளை மாத்திரம் அனுபவிக்கவில்லை, அவர் இந்த

*உலகத்தின் பாவங்களையும் சுமந்து தீர்த்தார் (2 கொரிந்தியர் 5:21) மற்றும் அவர் தமது பிதாவினிடத்தில் இருந்து பிரிக்கப்பட்டார் (27:46).* David Hill *அவர்கள், "தேவன் மீது இன்னமும் நம்பிக்கை வைத்த, ஆனால் கொடுமையான மரணம் ஒன்று தம்மை எதிர்கொள்ளும் என்று அறிந்திருந்த ஒருவரின் துக்கம் நிறைந்த கீழ்ப்படிதல்" என்று இயேசுவின் நிலையை விவரித்தார்.*[9]

***வசனம் 38.*** *இயேசு தமது மூன்று தோழர்களிடத்திலும்,* ***என் ஆத்துமா மரணத்துக்கேதுவான துக்கங்கொண்டிருக்கிறது*** *என்று கூறினார்.* JNT *வேதாகமத்தில், "நான் மரிக்கக்கூடுமளவுக்கு என் இருதயம் கவலையினால் நிறைந்திருக்கிறது!" என்றுள்ளது. இயேசுவின் கூற்றின் முதல் பாகம், "என் ஆத்துமாவே, நீ ஏன் கலங்குகிறாய்? ஏன் எனக்குள் தியங்குகிறாய்?" என்று சங்கீதக்காரர் கேட்ட சங்கீதங்களைப் பின்னோக்கிச் சுட்டிகாண்பிக்கிறது (சங்கீதம் 42:5, 11; 43:5). சங்கீதக்காரர் தம்மை விடுவிக்கும் தேவன் மீது நம்பிக்கை வைக்க வேண்டும் என்று தமக்குத்தாமே திரும்பத் திரும்ப நினைவூட்டிக் கொண்டார்.*

*இயேசு தமது மூன்று சீஷர்களிடத்திலும்,* ***இங்கே தங்கி, என்னோடேகூட விழித்திருங்கள்*** *என்று கூறினார். இந்த இடர்ப்பாடான வேளையில் அவருக்குத் தமது நண்பர்களின் ஆதரவு தேவைப்பட்டது, ஆனால் அவர்கள் அவருக்கு ஆதரவு தரத்தவறி விட்டனர் (26:40, 43, 45).*

## ஜெபத்தின் வேளை
## *(26:39-46)*

***39சற்று அப்புறம்போய், முகங்குப்புற விழுந்து: என் பிதாவே, இந்தப் பாத்திரம் என்னைவிட்டு நீங்கக்கூடுமானால் நீங்கும்படி செய்யும்; ஆகிலும் என் சித்தத்தின்படியல்ல, உம்முடைய சித்தத்தின்படியே ஆகக்கடவது என்று ஜெபம்பண்ணினார்.***

***40பின்பு, அவர் சீஷர்களிடத்தில் வந்து, அவர்கள் நித்திரைபண்ணுகிறதைக் கண்டு, பேதுருவை நோக்கி: நீங்கள் ஒரு மணி நேரமாவது என்னோடேகூட விழித்திருக்கக்கூடாதா?***

***41நீங்கள் சோதனைக்குட்படாதபடிக்கு விழித்திருந்து ஜெபம்பண்ணுங்கள்; ஆவி உற்சாகமுள்ளதுதான், மாம்சமோ பலவீனமுள்ளது என்றார்.***

***42அவர் மறுபடியும் இரண்டாந்தரம் போய்: என் பிதாவே, இந்தப் பாத்திரத்தில் நான் பானம்பண்ணினாலொழிய இது என்னைவிட்டு நீங்கக்கூடாதாகில், உம்முடைய சித்தத்தின்படி ஆகக்கடவது என்று ஜெபம்பண்ணினார்.***

***43அவர் திரும்ப வந்தபோது, அவர்கள் மறுபடியும் நித்திரைபண்ணுகிறதைக் கண்டார்; அவர்களுடைய கண்கள் மிகுந்த நித்திரைமயக்கம் அடைந்திருந்தது.***

***44அவர் மறுபடியும் அவர்களை விட்டுப்போய், மூன்றாந்தரமும் அந்த வார்த்தைகளையே சொல்லி, ஜெபம்பண்ணினார்.***

***45பின்பு அவர் தம்முடைய சீஷர்களிடத்தில் வந்து: இனி நித்திரைபண்ணி இளைப்பாறுங்கள்; இதோ, மனுஷகுமாரன் பாவிகளுடைய கைகளில் ஒப்புக்கொடுக்கப்படுகிற வேளை வந்தது.***

*[46]**என்னைக் காட்டிக்கொடுக்கிறவன், இதோ வந்துவிட்டான், எழுந்திருங்கள், போவோம் என்றார்.***

***வசனம் 39.** பேதுரு, யாக்கோபு மற்றும் யோவான் ஆகியோரை **இயேசு** தமது காவலாளிகளாக வைத்துவிட்ட அவர், சற்று **அப்புறம்போய், முகங்குப்புற விழுந்தார்.** இயேசுவின் ஊழியத்தின்போது, எண்ணற்ற மக்கள் வந்து அவருக்கு முன் குனிந்து பணிந்தனர் (2:11; 8:2; 9:18; 17:6; மாற்கு 3:11; 5:6; 10:17; லூக்கா 5:12; 17:16). இந்த வேளையில் அவர், ஊக்கமான ஜெபத்தில் தேவனுக்கு முன்பாகத் தாழ்மையுடன் குனிந்து பணிந்தார்.*

*இயேசு, **என் பிதாவே, இந்தப் பாத்திரம் என்னைவிட்டு நீங்கக்கூடுமானால் நீங்கும்படி செய்யும்; ஆகிலும் என் சித்தத்தின்படியல்ல, உம்முடைய சித்தத்தின்படியே ஆகக்கடவது** என்று ஜெபித்தார். இயேசு கூறிய "பாத்திரம்" என்பது பாடுகள் மற்றும் மரணம் ஆகியவற்றின் பாத்திரமாக உள்ளது. யாக்கோபுவும் யோவானும் தங்கள் தாயை முகவராகக் கொண்டு, இராஜ்யத்தில் தாங்கள் அவரது வலது மற்றும் இடது புறத்தில் அமரமுடியுமா என்று கேட்டபோது, இயேசு இதே மொழிநடையைப் பயன்படுத்தினார். அவர்களிடத்தில் அவர், **நான் குடிக்கும் பாத்திரத்தில் நீங்கள் குடிக்கவும், நான் பெறும் ஸ்நானத்தை நீங்கள் பெறவும் உங்களால் கூடுமா?** என்று கேட்டார் (20:22). பழைய ஏற்பாட்டின் சொற்றொடர்களில், "பாத்திரத்தில் குடித்தல்" என்பது நல்ல அல்லது மோசமான என்று எப்படி இருந்தாலும், ஒரு நிகழ்வில் ஏற்படும் எல்லா அனுபவத்தையும் அனுபவித்தல் என்பதை அர்த்தப்படுத்திற்று (சங்கீதம் 11:6; 16:5; 23:5; 75:8; 116:13; ஏசாயா 51:17; ஏரேமியா 16:7; 25:15). இயேசுவின் மனித இயல்பு, கொல்கொதாவில் அவருக்காகக் காத்திருந்த பயங்கரத்தை எதிர்த்து நின்றது, ஆனால் வேதனை நிறைந்த இந்த மரணத்தில் இருந்து நீக்கப்பட வேண்டும் என்ற அவரது விருப்பம், அவரது பிதாவின் சித்தத்தின்படி செய்ய வேண்டும் என்ற அவரது விருப்பத்தினால் மேல் நிழலிடப்பட்டது (காண்க 6:10).*

***வசனம் 40.** மூன்று அப்போஸ்தலர்களும் **உறங்கிக் கொண்டிருப்பதாகக்** காணப்பட்டாலும், இயேசு தமது விமர்சனங்களை முதலில் **பேதுருவை** நோக்கித் திருப்பினார். இது, அந்தக் குழுவில் அவரது செல்வாக்கு அல்லது தேவைப்பட்டால் இயேசுவுடன் அவர் மரிப்பார் என்ற தைரியமான வலியுறுத்தல் காரணமாக இருந்திருக்கலாம் (26:33, 35). அவரிடத்தில் கர்த்தர், **நீங்கள் ஒரு மணி நேரமாவது என்னோடேகூட விழித்திருக்கக்கூடாதா?** என்று கேட்டார். தமக்கு மிக நெருக்கமான தோழர்கள் தாம் ஜெபிக்கையில் ஒரு மணிநேரம் விழித்திருக்கக் கூடாதா என்பது அவரை மிகவும் ஆழமாகத் தொட்டிருக்க வேண்டும்.*

*உறங்குதல் (நித்திரைபண்ணுதல்) என்பது புதிய ஏற்பாட்டில், ஜாக்கிரதையற்று வாழும் மற்றும் தாங்கள் இருக்கும் சூழ்நிலைகள் பற்றி தக்க கவனிப்பு தராத மக்களைக் குறிக்க ஒரு ஒப்புவமையாகச் சிலவேளைகளில் பயன்படுத்தப் பட்டுள்ளது. உறங்குவதற்குப் பதிலாகக் கிறிஸ்தவர்கள் விழித்திருந்து எச்சரிக்கையாக இருக்க வேண்டும் என்று புத்திகூறப்பட்டுள்ளது (ரோமர் 13:11; 1 கொரிந்தியர் 11:30; எபேசியர் 5:14; 1 தெசலோனிக்கேயர் 5:4-8).*

***வசனம் 41.*** *மீண்டும் ஒருமுறை இயேசு,* ***விழித்திருக்கும்படி*** *இந்த அப்போஸ்தலர்களிடம் வேண்டிக்கொண்டார் (காண்க 26:38). மேலும்* ***சோதனைக்கு உட்படாதபடிக்கு ஜெபிக்கும்படியும்*** *அவர்களிடம் அவர் கூறினார் (காண்க 6:13). அவர்கள் என்ன செய்யும்படி சோதிக்கப்படுவார்கள்? துல்லியமாக அவர்கள் என்ன செய்தார்களோ - அவரைக் கைவிட்டு ஓடிப்போகுதல் (மாற்கு 14:50) - அதைச் செய்யும்படி சோதிக்கப்படுதலையே அவர் அர்த்தப்படுத்தியிருக்க வேண்டும்.*

*ஆவி* ***உற்சாகமுள்ளதுதான், மாம்சமோ பலவீனமுள்ளது*** *என்பதை இயேசு ஒப்புக்கொண்டார். இங்கு "ஆவி" (pneuma) என்பது நமக்குள் வாழும் உயிரை, நம்மை இயக்கி நமக்கு வாழ்வு கொடுக்கும் ஆத்துமாவைக் குறிக்கிறது. இது நமது உட்கண்ணோக்கு, சித்தம் மற்றும் உணர்வு ஆகியவற்றின் ஆதாரமூலமாக உள்ளது.*

*இந்த சந்தர்ப்பப்பொருளில் "மாம்சம்" (sarx) என்பது பௌதிகமான "உடலை"க் குறிப்பதாக இருக்க வேண்டும் (NIV; NLT), இது பலவீனமாகவும் களைப்படைவதாகவும் உள்ளது (காண்க 26:43). வேதாகமத்தின் சில பதிப்புகள் இவ்வார்த்தையை "மனித இயல்பு" (NJB; JNT), என்று சுருக்கமாக மொழிபெயர்க்கின்றன, இது பொல்லாங்கைச் செய்தலுக்கான உள்ளான விருப்பத்தைச் சுட்டிக்காட்டக் கூடும். பிந்திய இந்த மொழிபெயர்ப்பு இவ்வார்த்தையின் தோற்றகால அர்த்தத்தை அரிதாகவே தெரிவிக்கிறது.*

***வசனம் 42.*** *மறுபடியும்* ***இரண்டாந்தரம்*** *போய் இயேசு,* ***என் பிதாவே, இந்தப் பாத்திரத்தில் நான் பானம்பண்ணினாலொழிய இது என்னைவிட்டு நீங்கக்கூடாதாகில், உம்முடைய சித்தத்தின்படி ஆகக்கடவது*** *என்று கூறி* ***ஜெபித்தார்.*** *இம்முறை முதன்மைச் சொற்றொடரானது "இந்தப் பாத்திரம் என்னைவிட்டு நீங்கக்கூடுமானால் நீங்கும்படி செய்யும்" (26:39) என்பதில் இருந்து "உம்முடைய சித்தத்தின்படி ஆகக்கடவது" என்று மாறிற்று.*

***வசனம் 43.*** *இயேசு தமது அப்போஸ்தலர்களிடம் திரும்பியபோது, அவர்கள் மறுபடியும்* ***நித்திரைபண்ணுகிறதைக் கண்டார்; அவர்களுடைய கண்கள் மிகுந்த நித்திரைமயக்கம் அடைந்திருந்தது*** *என்று அவர் கண்டார். மாற்கு 14:40 "தாங்கள் மறுமொழியாக அவருக்குச் சொல்வது இன்னதென்று அறியாதிருந்தார்கள்" என்று கூறுவதால், அவர்களிடம் அவர் பேசியது உறுதி. அவர்கள் வெறுமனே களைப்படைந்து மாத்திரம் இருக்கவில்லை; "அவர்கள் துக்கத்தினாலே நித்திரை"யாக இருந்தனர் (லூக்கா 22:45). அவர்கள் அந்த நாள் முழுவதிலும் மிகுதியாக வேலையாயிருந்தனர், மற்றும் அவர்களின் உணர்வுகள் எல்லை வரையிலும் இழுக்கப்பட்டிருந்தன. சிலவேளைகளில் துக்கம் என்பது நாம் நித்திரை செய்வதைத் தடுக்கக் கூடும்; ஆனால் அது, அப்போஸ்தலர்களுக்குச் செய்ததாக லூக்கா கூறியபடி, மனச் சோர்வையும் கொண்டுவரக் கூடும்.*

***வசனம் 44.*** *இயேசு* ***மறுபடியும் அவர்களை விட்டுப்போய், மூன்றாந்தரமும் அந்த வார்த்தைகளையே சொல்லி, ஜெபம்பண்ணினார்.*** *அவர் தமது பாடுகள் மற்றும் மரணம் ஆகியவற்றின் பாத்திரத்தைத் தமது பிதாவானவர் நீக்கிப்போடும்படி - மூன்று முறை - ஊக்கமாக ஜெபித்தார். அவரது ஜெபத்தின் வலிவு லூக்காவினால் முக்கியப்படுத்திக்*

காண்பிக்கப்பட்டது: "அவர் மிகவும் வியாகுலப்பட்டு, அதிக ஊக்கத்தோடே ஜெபம்பண்ணினார் அவருடைய வேர்வை இரத்தத்தின் பெருந்துளிகளாய்த் தரையிலே விழுந்தது" (லூக்கா 22:44).[10] அவரது ஜெபங்களின்போது ஒருதூதர் வந்து அவருக்குப் பணிவிடை செய்ததாகவும் லூக்கா குறிப்பிட்டார் (லூக்கா 22:43).[11]

இயேசு மரணத்தை வரவேற்ற வெறிகொண்ட இரத்தசாட்சியாக இருக்கவில்லை. அது ஒன்றுதான் தேவனுடைய கோபத்தைத் திருப்தி செய்யவும் பாவத்திலிருந்து உலகத்தை மீட்கவுமான ஒரே வழி என்பதால் அதற்கு அவர் தம்மை ஒப்புக்கொடுத்தார் (யோவான் 3:16, 36; 1 யோவான் 2:1, 2) பாடுகள் மற்றும் மரணம் ஆகியவற்றின் பாத்திரம் நீக்கப்படக் கூடாததாக இருந்தது.

இயேசு தமது ஜெபங்களின் மூலம், தமது சித்தத்திற்கு மேலாகப் பிதாவின் சித்தத்தைச் செய்யத் தீர்மானித்தார். கெத்செமனே தோட்டத்தில் அவரது தாழ்மையான ஒப்புக்கொடுத்தலானது, ஏதேன் தோட்டத்தில் ஆதாமும் ஏவாளும் மனவிருப்பத்துடன் (தேவனுக்கு) எதிர்த்து நின்ற செயலுக்கு நேர்மாறானதாக இருந்தது. Douglas R. A. Hare அவர்கள், "கிறிஸ்தவர்களுக்கு கெத்செமனே தோட்டம் ஏதேன் தோட்டத்தின் எதிர்மறையாக உள்ளது" என்று கூறினார்.[12]

**வசனம் 45.** இயேசு ஜெபித்தபின், **வேளை வந்தது** என்று தமது **சீஷர்களுக்குத்** தகவல் தெரிவித்தார் (26:18ன் மீதான விளக்கங்களைக் காணவும்). **மனுஷகுமாரன் பாவிகளுடைய கைகளில் ஒப்புக்கொடுக்கப்படுவார்,** பூமியின்மீது இயேசுவின் நோக்கம் நிறைவேற்றுவதற்கான வேளை வந்திருந்தது. தம்முடன் விழித்திருக்கும்படி தாம் கேட்டுக்கொண்டிருந்தவர்களை அவர் எழுப்பிய வேளையில், அவரைக் கைது செய்ய கும்பல் ஒன்று அணுகிக்கொண்டிருந்தது.

**வசனம் 46.** அப்போஸ்தலர்களின் உறக்கத்தில் இருந்து அவர்களை இயேசு, வலிவுநிறைந்த **எழுந்திருங்கள்** என்பதைக் கொண்டு எழுப்பினார். பிதாவின் சித்தத்திற்குக் கீழ்ப்படிவதற்கும் தமக்காகக் காத்திருந்த மரணத்திற்குத் தம்மை ஒப்புக்கொடுப்பதற்கும் வேளை வந்திருந்தது. அவரைக் காட்டிக்கொடுப்பவர் அண்மையில் இருந்தார். விரிக்கப்பட இருந்த நாடகத்தில் துடிப்பான பங்கேற்பாளர்களாக இருக்கக் கூடும்படிக்கு சீஷர்கள் முழுவதும் விழித்திருக்க வேண்டியிருந்தது.

---

குறிப்புகள்

[1]மத்தேயு சுவிசேஷத்தில் இந்த வார்த்தை பலமுறை காணப்படுகிறது (5:29, 30; 11:6; 13:21, 57; 15:12; 17:27; 18:6, 8, 9; 24:10; 26:31, 33). [2]R. T. France, *The Gospel According to Matthew*, The Tyndale New Testament Commentaries (Grand Rapids, Mich.: Wm. B. Eerdmans Publishing Co., 1985), 370. [3]Donald A. Hagner, *Matthew 14—28*, Word Biblical Commentary, vol. 33B (Dallas: Word Books, 1995), 777. [4]Mishnah *Baba Kamma* 7.7; Talmud *Baba Kamma* 82b. [5]14:25ன் விளக்கவுரையை காண்க. [6]Josephus *Wars* 5.12.4. [7]Michael J. Wilkins, "Matthew," in *Zondervan Illustrated Bible Backgrounds Commentary*, vol. 1, *Matthew, Mark, Luke*, ed. Clinton E. Arnold (Grand Rapids, Mich.: Zondervan, 2002), 166. [8]கெத்செமனேயுடன் தொடர்புடைய அதிக தகவல்களுக்கு Joan E. Taylor, "The Garden of

Gethsemane: Not the Place of Jesus' Arrest," *Biblical Archaeology Review* 21 (July/August 1995), 26–35, 62. *என்ற புத்தகத்தில் காணவும்.* [9]David Hill, *The Gospel of Matthew,* The New Century Bible Commentary (Grand Rapids, Mich.: Wm. B. Eerdmans Publishing Co., 1972), 341. [10]"Hemohidrosis" or "hematidrosis" *என்ற மருத்துவரீதியான நிலையின் விளைவாக இயேசுவின் வியர்வை இரத்தத்துடன் கலக்கப்பட்டது என்று சிலர் நம்புகின்றனர். மிக அதிகமான மன அழுத்தத்தில் ஒரு நபர் இருக்கும்போது, அவரது தோலுக்கு அருகில் உள்ள சிறு இரத்தக் குழாய்கள் பிளக்கின்றன; பின்பு இரத்தமானது வியர்வையுடன் ஒன்று கலந்து தோலின் நுண்துளைகள் மூலம் வெளியேறுகிறது. லூக்காவின் விவரிப்பு ஒரு ஒப்பீடு மாத்திரமே (ஒப்புவமை) என்று சிலர் மனநிறைவு அடைகின்றனர்: இயேசுவின் வியர்வை இரத்தத் துளிகள் "போலிருந்தது"* (*hōsei*) *ஒருவேளை அந்த அளவு மற்றும் வகையில் அது தரையில் விழுந்திருக்கும். வேறு வார்த்தைகளில் கூறுவதென்றால், அவர் மிகவும் அதிகமாக வியர்த்தார்.*

[11]*லூக்கா 22:43, 44ம் வசனங்கள், வசனரீதியாக ஒரு பிரச்சனையை முன்வைக்கிறது. ஐக்கிய வேதாகம சங்கத்தால் அச்சிடப்பட்ட கிரேக்க வேதாகமத்தில், இவ்வசனங்களைச் சுற்றி அடைப்புக் குறியிட்டு இவற்றை லூக்காவின் மூல சுவிசேஷத்தில் இல்லாதவை என்று ஏறக்குறைய நிச்சயிக்கிறது.* [12]Douglas R. A. Hare, *Matthew,* Interpretation (Louisville: John Knox Press, 1993), 303. *காண்க* Romans 5:19.